Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-5**

Name : பாபு
Father / Husband name : ரவி
Village : வடஆலப்பாக்கம்
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 09.03.2026

A2 present. A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஓட்டுநர் வேலை செய்கிறேன். அ.சா.4 ராமதாஸ் எனது ஊரை சேர்ந்தவர். அ.சா.1 - அ.சா.3 ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் 2வது எதிரியை எனக்கு தெரியும். வழக்கின் 1வது எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 14.06.2021 அன்று மாலை 05.45 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த ராமதாஸ் என்பவரும் வீட்டிற்கு சென்றபோது வடஆலப்பாகம் ரோட்டிலுள்ள மதுவிலக்கு அமல்பிரிவில் ஓட்டுநராக இருக்கும் அ.சா.1 PY 01 CM 5861 பல்சர் இருச்சக்கர வாகனத்தில் இன்டிகேட்டர் போட்டு காவல் நிலையம் திரும்புபோது 1வது எதிரி PY 01 CM 5512 என்ற அவேஞ்சர் வாகனத்தில் வந்தார் என்றும், அதனை அ.சா.1 கேட்டபோது அவரை எதிரி ராஜேந்திரன் அசிங்கமாக பேசி கழுத்து பிடித்து தள்ளிவிட்டார் என்றும், அவர்

கீழே விழுந்தவுடன் அவரின் கழுத்தை நெறித்தார் என்றும், நீங்களும் ராமதாஸ் என்பவரை மறித்துவிட்டீர்கள் என்றும், காவல் நிலையபோலிசார் வந்து சண்டையை மறித்தபோது எதிரி ராஜ்குமார் அங்கு வந்து அ.சா1 ஐ கையாலும், காலாலும் எட்டி உதைத்தார் என்றும், பின்னர் எதிரிகள் அ.சா..1 ஐ மிரட்டி சென்றார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.